விலை ரூபா 5/=

# ஐக்கிய தீபம்

Aikiyatheepam

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
05 NOV 2001
PERIODICALS DIVISION

தீபம் 55 | புரட்டாதி - 2001 | பக்கங்கள் 12 | ஒளி 51

# படித்துவிட்டு வேலையற்றிருக்கும் மகளிருக்கு

# சுயதொழில்களைபயிற்றுவிப்பதேஎமதுநோக்கம்!

## கூட்டுறவுசபைத் தலைவர் பெ. கனகசபாபதி உரை:

கிராமிய பொருளாதார அபிவிருத்திக்கு கூட்டுறவு மூலமானசெயற்பாடுகளைத்தவிரவேறுஎந்த அமைப்பு ரீதியான செயற்பாடுகளும் சிறந்த பலனை அளிக்கமுடியாது. படித்துவிட்டு வேலை அற்று இருக்கும் கிராமிய மகளிர்களுக்கு சுயதொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் பரிசில்களை வழங்குவதே கூட்டுறவு சபையின் முக்கிய செயற்பாட்டில் ஒன்றாகும்.

யாழ் மாவட்ட கூட்டுறவு சபையின் அனுசரணையுடன் கூட்டுறவு சங்கங்களின் மகளிர்களுக்கான ஐந்து நாள் தலைமைத்துவ பயிற்சி பட்டறையை ஆரம்பித்து வைத்துப் பேசிய கூட்டுறவுச் சபைத்தலைவர் திரு பெ கனகசபாபதி மேற்கண்டவாறு கூறினார்.

திருமதி. இ இராசமணி தல்மையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கூட்டுறவுச்சபைத்தலைவர் திரு பெ: கனகசபாபதி மேலும் பேசுகையில் கூறியதாவது.

பாடசாலைக் கல்வியை முடித்துவிட்டு வீடுகளில் தங்கியிருக்கும் மகளிர்களுக்கும் அவர்களது தகுதிக்கும் ஆற்றலுக்கும் ஏற்ப பல்வேறு பயிற்சிகளை யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபையின் மாவட்ட மகளிர் குழு வழங்கிவருகிறது. எந்தவொரு அபிவிருத்தித்திட்டத்தினையும் நிறுவன ரீதியாகவே செயற்படுத்த முடிகிறது. செயற்படுத்தும் நிறுவனம் கூட்டுறவு அமைப்பினால் நிறுவனங்கள் அவற்றை நிறைவேற்றுவது சுலபமாகும் எந்தவிடையத்தையும் கூட்டுறவுமூலம் தான் நிறைவேற்றுவது சுலபமானதாகும் என்றுகூறினார்;

## புலமைப் பரிசில் பரிசளிப்பு விழா

கட்டைவேலி - நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரின் புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆறுமுகநாவலர் அரங்கில் சங்கத்தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்திற்கு பிரதம விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு செ. கு சண்முகநாதன் அவர்களும். சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் திரு ஆ' சிவசுவாமி அவர்களும், உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. க அம்பலவாணர் அவர்களும் கலந்து கொண்டனர்.

இவ்வைபவத்தில் கட்டைவேலி - நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவு சங்க முன்நாள் உபதலைவர் திரு. செ. சதானந்தன் வரவேற்புரையையும். சந்நிதியான் ஆச்சிரம பேரவையைச் சேர்ந்த பண்டிதர் த. முத்துவேல் கவிதை வாசிக்கலையும், திருமதி பரிதா இராஜவிசாகன் கூட்டுறவுக் கீதத்தையும் இசைத்தார்.

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தலைவர் திரு. சு. சுப்பிரமணியம், கூட்டுறவு மகளிர் குழுத் தலைவி பண்டிதை திருமதி: வ. பத்தினிப்பிள்ளை ஆகியோர்ஆசியுரை வழங்கினார்கள்

இவ்வைபவத்தின்போது 2000 ஆம் ஆண்டில் 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களுக்கும், 1999 - 2000ம் ஆண்டுகளில் க. பொ. த. சாதாரண பரீட்சையில் கூடிய விசேட சித்தியடைந்தவர்களுக்கும், 2000ம் ஆண்டில் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் துறைவாரியாக அதிகூடியபுள்ளிகளைப் பெற்றவர்களுக்கும் கல்விசார் போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்கும் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

### உள்ளே...

* அறிவுசார் மூலதனம்
* தீக்காயம் பட்டவுடன் தண்ணீரை ஊற்றுங்கள்
* பொது அறிவு
* எத்தனை சம்பள அதிகரிப்புகள் நேர்காணல்

★ கூட்டுறவே நாட்டுயர்வு ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுசார் மூலதனம் Intellactual Capital

### அறிமுகம்

மனித வள முகாமைத்துவமே நிறுவனங்களின் வளர்ச்சிக்கு அடிப்படையானது என தற்கால முகாமைத்துவம் கருதுகின்றது. உயர் உற்பத்தித் திறனை பெற்றுக் கொள்ள மனிதவள முகாமைத்துவம் வகை செய்வதாக உள்ளது. இதன் காரணமாகவே அறிவுசார் மூலதனத்தின் மீது தற்கால நிறுவனங்கள் அக்கறை கொண்டுள்ளன. ஒவ்வொரு ஊழியரும் தாம் செய்யும் வேலை பற்றியும் நிறுவனத்தின் கொள்கை பற்றியும் அக்கறை கொள்ள வைப்பதாக அறிவுசார் மூலதனம் உள்ளது.

ஊழியர்களிடையே தகமையினையும் அர்ப்பணிப்பினையும் ஏற்படுத்த முயற்சிப்பதே அறிவுசார் மூலதனமாகும். அல்லது Intellectual Capital = Competency Commitment என்ற சமன்பாடு நிறுவப்பட்டுள்ளது. நிறுவனம் ஒன்றின் இலக்கினை அடைவதற்குத் தலைமை அர்ப்பணித்த பயிற்றப்பட்ட ஊழியர்களே நிறுவனம் ஒன்றுக்கான பிரதான சொத்தாகும். அறிவுசார் மூலதனமே நிறுவனம் ஒன்றின் தேய்விற்கு உட்படாத பெறுமானம் அதிகரித்துச் செல்லும் தன்மை கொண்டதாகவும் குறைவடையாப் பண்புகொண்டதாகவும் காணப்படும். அறிவுசார் மூலதனத்தைக் கொண்ட ஊழியர்கள் என்றுமே தன்னிச்சையான ஒத்துழைப்பை வழங்குபவர்களாக இருப்பர் இதன் காரணமாகவே தற்காலத்தில் அறிவுசார் மூலதனம் என்பது தற்கால நிறுவனங்களின் வளர்ச்சிக்கு மிகவும் வேண்டப்படுவதாக உள்ளது.

### வரைவிலக்கணம்

ஊழியர்களின் தகமையும் அர்ப்பணிப்புத்தன்மையும் நிறைந்ததுதான் அறிவுசார் மூலதனமாகும். தகமை அதிகமாகவும் அர்ப்பணிப்புத் தன்மை குறைவாகவும் இருந்தால் திறமையுள்ள ஊழியர்கள் செய்வதற்கு எதுவும் இருக்கமாட்டாது; மாறாக உயர்ந்த அர்ப்பணிப்பும் குறைந்த அளவான தகமையும் காணப்பட்டால் திறமை குறைந்தவர்களே பெரும்பாலான வேலைகளைப் பெற்றுக்கொள்வர். இவை இரண்டுமே ஆபத்தானவை என்பதனால் அறிவுசார் மூலதனமானது இரண்டையுமே அதாவது தகமையினையும், அர்ப்பணிப்பையும், உச்சமாக வைத்துக் கொள்ளும் நடவடிக்கையே அறிவுசார் மூலதனமாகும். இத்தகைய அறிவுசார் மூலதனத்தை உச்சமாக்குவதன் மூலம் வாடிக்கையாளர் நம்பிக்கை, உயர் உற்பத்தித் திறன், இலாபத்தன்மையின் அதிகரிப்பு ஆகியவற்றை அடைந்துகொள்ள முடியும்.

அறிவுசார் மூலதனத்தை கொண்டிருப்பதன் ஊடாக பின்வரும் பண்புகளை நிறுவனம் கொண்டிருக்க முடியும்.

ஏனைய சொத்துக்கள் போல் அல்லாது அறிவுசார் மூலதனத்தின் பெறுமதி தொடர்ச்சியாக உயர்ந்து செல்லும்.

அறிவுசார் மூலதனத்தின் பண்பிற்கு ஏற்ப ஊழியர்களின் வேலைத்திறன் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும்

அறிவுசார் மூலதனத்தைக் கொண்டுள்ள ஊழியர்கள் தொண்டர்கள் போல் தன்னலமற்ற சேவையை வழங்க முன்வருவதால் அர்ப்பணிப்பு பெருகிவரும்.

அறிவுசார் மூலதனத்தின் வழியாகவே முகாமையாளர் உலகளாவிய போட்டி, நுகர்வோரின் அதிகரித்த தேவைகள் என்பவற்றைப்பூர்த்தி செய்ய இயலும்.

அறிவுசார் மூலதனத்தின் மூலமாகவே நிறுவனத்தின் நோக்கத்தை மையமாகக் கொண்டு இயங்கும் ஊழியர்களை உருவாக்க முடியும்.

அறிவுசார் மூலதனத்தைக் கொண்ட நிறுவனங்களே ஊழியர்கள் கூடி இயங்க வகை செய்யும்.

என்ற வகையில் அறிவுசார் மூலதனத்தின் பண்புகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

### தகமையை அதிகரித்தல்

அறிவுசார் மூலதனத்தின தகமையை அதிகரித்தல் என்பது ஒரு முக்கிய பண்பாகும். இதன்படி திறமைகளை வியாபார தந்திரோபாயங்களுக்கு ஏற்ப வரிசைப்படுத்த வேண்டும். அதன் பின்னர் போட்டித் தன்மையானது பல பொறிமுறைகள் ஊடாக வளர்க்கப்பட வேண்டும் பின்வரும் ஐந்து பண்புகளும் தகமையை வளர்ப்பதற்கு பெரிதும் உதவும்.

### வாங்குதல் Buy

திறமையான நபர்களை உள்வாங்குதல், தெரிவு செய்தல், ஆகியவற்றைக் குறைப்பதே உள்வாங்குதல் என்பதாகும் இந்த நடவடிக்கை புதிய எண்ணங்களை உருவாக்குதல் பழைய கலாசார முறைகளை நீக்கிவிடுதல் என்பவற்றை அடக்கும். புதியவர்களை உள்வாங்குவதன் மூலம் நிறுவனத்திற்கு புதிய சிந்தனை ஆற்றல் கொண்டவர்களை அதிகரிப்பதுடன் புதிய தந்திரோபாயங்களும் உருவாக்கப்பட முடியும்.

### உருவாக்கல் Build

முகாமையாளர்கள் நிறுவனத்தில் தொடர்ந்து இருக்கக்கூடியவாறும், ஊழியர்கள் புதிய நுட்பங்களை கற்றுக்கொள்ளக் கூடியவாறும் நடவடிக்கை எடுப்பதே இதுவாகும் வழிகாட்டுதல் பயிற்சியளித்தல் போன்றவற்றுக்காக நிறுவனங்கள் பெருமளவு நிதி வசதிகளை ஒழுங்கு செய்தல் இத்தகைய நிலையை அடைவதற்கே ஆகும்; பாரிய நிதிச் செலவில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஊழியர்களிடையே புதிய எண்ணங்களை உருவாக்கவும் நடத்தைகளைமாற்றியமைக்கவும் முகாமையாளர்களுடன் இணைந்து பணியாற்றவும் தூண்டும் எனக்கொள்ளப்படுகின்றது.

### பெறப்படல் Borrow

நிறுவனங்கள் புதிய எண்ணங்கள், உபகரணங்கள், நடைமுறைகள் ஆகியவற்றை வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையே இதுவாகும் வெளியில் இருந்து ஆலோசனைச் சேவை ( Consultancy Serviec ) பெறுவது இதில் முக்கியம் பெறுகின்றது நிபுணர்களை வரவழைத்து கருத்துக்களை நடாத்துதல், புதிய வடிவமைப்புக்களை உருவாக்குதல் போன்றவற்றை வெளியில் இருந்து பெற்றுக்கொள்ளலே பெறப்படலாக அமைகின்றது. இந்த நிலையில் பெருமளவான பணச் செலவும் நேர விரயமும் ஏற்படலாம்.

(3ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவுசார்

2ம் பக்கத் தொடர்ச்சி

சொந்தமாக எண்ணங்களை உருவாக்கும் திறன் மழுங்கடிக்கப்படலாம், இருந்த போதும் வெளிநிறுவனங்களது அனுபவங்களை பெற்றுக்கொளவது அறிவுசார் மூலதனத்தின் விருத்திக்கு அடிப்படையில் அமையும்.

### 3. 4 நீக்குதல் Bounce

நிறுவனங்கள் நியமப் பெறுபேறுகளை அடையாத நபர்களைக் கொண்டிருப்பது நன்மை தரமாட்டாது என்பதனால் அவர்களை நீக்கிவிடுதல் வேண்டும். சில நேரங்களில் ஊழியர்கள் திறமைகளை வளர்க்கவும் புதியநுட்பங்களைக் கற்றுக்கொள்ளவும் தவறிவிடுகின்றனர். வேறு சில சமயங்களில் சரியான முறையில் மாற்றங்களை அறிமுகப்படுதத்தத் தவறியவர்களை நிறுவனங்கள் வைத்துக் கொள்ளக்கூடாது. அதாவது இவர்கள் நிறுவனத்தில் தொடர்ந்திருப்பது பெரும் பாதிப்பைக் கொண்டு வரும் என்பதாகும்.

### 3. 5 கட்டுதல் Bind

பயிற்றப்பட்ட ஊழியர் எல்லா மட்டங்களிலும் நிறுவனங்களுக்கு முக்கியமாவர் இத்தகையவர்களை சிரேஷ்ட முகாமையாளர்களுடன் பழக விடுவதன் மூலம் அவர்களின் திறமையை அறிவது, அணுகு முறைகளைக் கற்றுக் கொள்வது தொழில்நுட்ப அறிவைப்பெறுவது போன்றன சாத்தியமாகின்றன நிறுவனத்தை விட்டு வெளியேறுகின்ற ஊழியர்களை பேட்டி கண்டு அவர்களைத் தொடர்ந்துநிறுவனத்தில்பணியாற்றுவதற்காக தூண்டுவது கட்டுதல் என்பதைக் குறிக்கின்றது. இதன்படி தொழிலாளர் புரள்வை இழிவு மட்டத்தில் வைத்துக்கொள்ள முடியும்.

### அர்ப்பணிப்பிற்குஎதிராகஅழித்தல் Commitment Versus Burnout

அறிவுசார் மூலதனத்தை அதிகரிப்பதற்கான இன்னொரு வழியே அர்ப்பணிப்பு என்பதாகும். கூடுதலான அர்ப்பணிப்பினைக் கொண்ட ஊழியர்கள் பொறுப்புக்கள் இல்லாத போதும் நன்றாக பணியாற்றுவர், தனிப்பட்ட ரீதியில் இயங்குபவர்கள் திறமைசாலிகளாக இருந்தாலும் ஒரு குழுவைப் போல் பெறுபேறுகளை பெறமுடியாது இதன்படி ஊழியர்கள் எவ்வாறு மற்றையவர்களைப் பற்றி உணர்கின்றார்கள், எவ்வாறு அவர்களுடன் நடந்து கொள்கின்றார்கள். என்பது கவனிக்கப்படுகின்றது. மூலதனம் அதிகரிப்பால் ஊழியர்களின் பொறுப்புக்கள் குறைந்துவிடக் கூடும்.

ஊழியர்களின் பொறுப்புக்களை உயர்த்துவதற்குப் பல வழிகள் பின்பற்றப்பட முடியும் உலகலாவிய போட்டி, வாடிக்கையாளர் நலன், நெகிழும் தன்மை, உயர் கற்றல் செயற்பாடு, கூடிய குழுச்செயற்பாடு, கூடிய உற்பத்தித்திறன் என்பவற்றை ஏற்படுத்தும் பொறுப்பு அவசியமாகின்றது இந்த அனைத்துச் சவால்களையும் சமாளிப்பதற்கு அறிவுசார் மூலதனமானது ஊழியர்களிடையே உடல், உள எழுச்சிகளை அதிகரிக்க வேண்டியுள்ளது பெரும்பாலான முகாமையாளர்கள் இவற்றைக் கருத்திற் கொள்ளாது ஊழியர்களிடம் தொடர்ந்து மேலதிகமான செயற்பாடுகளையே எதிர்பார்க்கின்றனர். இதனால் ஊழியர்களிடம் சோர்வுத் தன்மையையும் பொறுப்பற்ற தன்மையும் உருவாக முடியும். எப்பொழுதுமே ஊழியர்களிடம் அர்ப்பணிப்பு குறைவாக இருக்குமாயின் அதற்கான காரணத்தைக் கண்டறிதல் வேண்டும். இளம் தொழிலாளர் விரைவாகத் தொழிலில் முன்னேற்றத்தை விரும்புபவர்கள் என்பதால் அதனை நிவர்த்திக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

நிறுவனங்களிலே ஊழியர்களது அர்ப்பணிப்பை உயர்த்துவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட முடியும் குறிப்பாக

### தேவைகளைக் குறைத்தல் Reduce Demand

ஊழியர்கள் வேறுபட்ட முக்கியத்துவத்தின் அடிப்படையில் தேவைகளைக் கொண்டிருக்க முடியும். இதனால் தேவையற்றவற்றை நீக்கி அவசியமான தேவைகளை மட்டுமே கொண்டிருக்க வகை செய்ய வேண்டும்.

### முதன்மைப்படுத்தல் Priorities

இதன்படி சில தேவைகள் நீக்கப்பட்டுவிடும் ஒரு குழு நல்ல பெறுபேறுகளைப் பெறுமாயின் மற்றைய ஊழியர்களும் அதனுடன் இணைவதன் மூலம் நல்ல பெறுபேற்றினைப் பெறுவர்.

இதன்படி குழுவிற்கு பயிற்சி வழங்கப்படும் போது மற்றைய ஊழியர்களும் அதில் இணைந்துகொள்வர்.

### வளங்களை அதிகரித்தல் Increase Resources

வளங்களின் பற்றாக்குறையானது ஊழியர்களிடையே அதிருப்தியைக் கொண்டு வரும். இந்த அதிருப்தி அர்ப்பணிப்பினைக் குறைத்துவிடும் என்பதால் வளங்களை இயலுமான வரை அதிகரித்தல்அவசியமாகின்றது.

### தந்திரோபாயம் Strategy

ஊழியர்கள் கொலைநோக்குக் கொண்டவர்களாக மாற்றப்படுதல் வேண்டும் தொலைநோக்குகொண்ட ஊழியர்களே கடுமையான வேலை செய்யும்மனப்பாங்கையும் அர்ப்பணிப்பினையும் கொண்டிருப்பவர்கள்.

### வேலையில் போட்டி Challenging Work

ஊழியர்களிடையே புதிய திறன்களை அபிவிருத்தி செய்யக்கூடிய வகையில் வேலையில் போட்டியை கொண்டுவருதல் வேண்டும் இதன் மூலம் ஊழியர் அர்ப்பணிப்பு தானாகவே உருவாகும்.

### குழுவேலை Tean Work

ஊழியர்கள் ஒன்றாகக்கூடி வேலை செய்யும் நிலையை உருவாக்குதல் வேண்டும் குழுக்களாக வேலை செய்தல் ஊழியர்களிடையே அர்ப்பணிப்பினை பெரிதும் வளர்க்கின்றது.

### வேலைக்கலாச்சாரம் Work Culture

இது வேலை செய்வதற்கான சூழலை உருவாக்கும் நடவடிக்கையாகும். நல்ல வேலைச் சூழ்நிலையில் பணியாற்றும் ஊழியர்கள் அர்ப்பணிப்பினை வளர்த்துக்கொள்வர்.

### இலாபப்பங்கு

நிறுவனங்கள் உழைக்கும் இலாபம் தனியேமுதலீட்டாளருக்கு மட்டு

11ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீக்காயம் பட்டவுடன் தண்ணீரை ஊற்றுங்கள்
## “கோப்பித்தூள்” “மை” தடவக்கூடாது

தீதொடர்புடைய பொருள் களில் எப்போதும் கவனத்துடன் செயல்படுவதே நல்லது. ஏனெனில் பாதிப்பின் தன்மைக்கு ஏற்ப உடலில் பலவிளைவுகளை தீக்காயங்கள் ஏற் படுத்தக் கூடியவை

நான்கு வகை : டிரை பர்ன்ஸ் (Dry Burns ) வெட்பர்ன்ஸ் ( Wet Burns ) எலக்ட்ரிக் பர்னஸ் (Electric Burns ) கெமிக்கல் பர்னஸ் (Chemi cal Burns ) என தீக்காயங்களில் நான்கு வகை உண்டு.

நேரடியாக தீ படுவதால் ஏற்ப டும் புண்களுக்கு டிரை பர்னஸ் என்று பெயர். சூடான பால், காபி, டி, வெந்நீர் ஆகியவை உடலின் மீது கொட்டுவதால் ஏற்படும் தீக்காயங் களுக்கு வெட்பர்னஸ் என்று பெயர்,

சமையல் அறையில்:- பொதுவாக சமையல் அறையில் ஏற்படும் சிறு விபத்துக்களால் தீக்காயங்கள் ஏற்ப டுகின்றன. சமையல் எரிவாயுக்கசிவு எண்ணெய்ச் சட்டியை அடுப்பில் வைத்துவிட்டு தொலைபேசி அழைப்பு அல்லது உறவினருடன் பேசிக்கொண் டிருத்தல், சூடான பானங்களை குழந்தைகள் எட்டி எடுக்க முயன்று உடலின்மீது ஊற்றிக் கொள்ளுதல் உட்பட பல காரணங்களால் தீக்கா யங்கள் ஏற்படலாம் காஸ் அடுப்பு எரிந்துகொண்டிருக்கும்போது ஏதே னும் தீ விபத்து ஏற்பட்டால் ரெகு லேட்டரை உடனே மூடிவிட வேண் டும் காஸ்கசிவதுபோல்தெரிந்தால்மின் சார ஸ்விட்சுகளை போடவே கூடாது ஏனெனில் அதனால் ஏற்படும்ஸ்பார்க் காரணமாக காஸ்சிலின்டர் வெடித்து பெரும் தீ விபத்து ஏற்பட வாய்ப்பு உண்டு.

தண்ணீரை ஊற்றுங்கள் :-

தீக்காயம் ஏற்பட்டவுடன் மருத் துவமனைக்கு அழைத்துச்செல்வதற்கு முன்பு பாதிக்கப்பட்ட பகுதி முழுவ தும் சாதாரண தண்ணீரை ஊற்ற வேண்டும் சூடான பானங்களை உடல் முழுவதும் குழந்தைகள் கொட்டிக் கொள்ளும் நிலையில் தண் ணீரை ஊற்ற வேண்டும். இப்படிச் செய்வதால் தீயின் பாதிப்பு தோலின் ஆழம் வரை செல்வதைத் தடுக்க முடியும். தண்ணீர் ஊற்றுவதால் செப்டிக் ஆகிவிடும் என்று நினைப்பது தவறானது. ஐஸ்வாட்டரை ஊற்ற வேண்டாம்.

காபித்தூள் கூடாது. மற்றவர் கள் சொல்லுவதைக் கேட்டு தீக்கா யத்தின் மீது உடனடியாக காபித் தூள், இங்க், தோசை மாவு, மஞ்சள் ஆகியவற்றை தடவக் கூடாது. இது போன்று வண்ணப் பொருள்களைத் தடவுவதால் தோலுக்குக் கீழே தீக் காயத்தின் பாதிப்பை சரியாகத் தெரிந்து கொள்ள முடியாத நிலை மருத்துவர்களுக்கு ஏற்படும் மேலும் இப்பொருள்களால் செப்டிக் ஆக வாய்ப்பு உண்டு.

தீக்காயத்தின் மீது ஓரளவு தண் ணீர் ஊற்றிய பிறகு சுத்தமான வெள்ளைத் துணியால் காயத்தை மூடி பாதிக்கப்பட்டவரை மருத்துவ மனைக்கு உடனடியாக அழைத்துச் செல்ல வேண்டும்.

# சுகவளம்

மூன்று நிலைகள் : தீக்காயத்தின் தன்மைக்கு ஏற்ப மூன்று நிலைகளின் மூலம் பாதிப்பின் அளவை அறிந்து கொள்ள முடியும் சாதாரண தீக்கா யம் ஏற்பட்டால் பாதிப்படைந்த பகுதி சிவந்து காணப்படும் எரிச்சல் இருக்கும். வீக்கம் இருக்காது. இது தான் முதல் நிலை தீக்காயத்தின் அறிகுறிகள். ஆபத்தில்லை என்றா லும் நோய்த்தொற்று உட்பட தொடர் விளைவுகளைத் தவிர்த்துக் கொள்ள மருத்துவரிடம் காண்பித்து விடுவது நல்லது.

இரண்டாவது மூன்றாவது நிலை தீக்காயத்தின் பாதிப்பு ஓரளவு அதி கமாக இருந்தால் கொப்புளங்கள் ஏற்படும். தோலில் சிவப்புத்தன்மை இருக்காது எரிச்சல் இருக்கும். இவ் வாறு கொப்புளங்கள் ஏற்பட்டாலும் உடனடியாகத் தண்ணீர் ஊற்ற வேண்டும். இவ்வாறு இரண்டாவது நிலை தீக்காயங்கள் ஏற்படும் போது ஒருமாத அளவுக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படும்.

தோலின் பெரும் பகுதியில் ஆழ மாக தீக்காயங்கள் ஏற்படும் போது உடனடி சிகிச்சை அவசியம் இது மூன்றாவது நிலை வலி இருக்கும் ஆனால் பாதிப்பு ஏற்பட்ட இடத்தில் உணர்ச்சி இருக்காது.

தீ காரணமாக ஆழமான பாதிப்பு ஏற்பட்டால் ரத்தக்குழாய் கள் விரிவடைந்து சோடியம் குளோ ரைட்டு, பொட்டாசியம் போன்ற உப்புச்சத்துக்களும் புரோட்டின் சத்து அடங்கிய பிளாஸ்மாவும் வெளியே றத் தொடங்கிவிடும்.

அதிர்ச்சி, தாகம் :- இரத்தக் குழாய் விரிவடைவதால் பெரும் தீக் காயம் அடைந்தவருக்கு அதிர்ச்சி ஏற்படும். தாகமும் ஏற்படும் பாதிக் கப்பட்டவரை காற்றோட்டம் உள்ள இடத்தில் உட்காரவைத்து நம்பிக்கை வார்த்தைகளைச் சொல்ல வேண்டும் சுயநினைவோடு இருந்தால் குடிக்க உப்புகலந்த தண்ணீர் கொடுக்கலாம் அரைமயக்க நிலையிலோ அல்லது படுத்திருக்கும் நிலையிலோ குடிக்க தண்ணீர் கொடுக்கக் கூடாது. ஏனெ னில் பாதிக்கப்பட்டவர் வாந்தி எடுத்து அது நுரையீரலுக்குள்சென்று மூச்சுத் திணறலை ஏற்படுத்தி உயி ருக்கே ஆபத்து ஏற்படும் வாய்ப்பு உண்டு தோல் சுருக்கத்தைத் தடுக்க தீக்காயங்கள் ஏற்பட்டு சிகிச்சை பெறத் தொடங்கியவுடன் பாதிக்கப் பட்ட இடம் ஆறத்தொடங்கி தழும் புகள் ஏற்படும். அப்போது தோலும் சுருங்கும் என்பதால் சிகிச்சையின் ஆரம்பத்திலிருந்து பாதிக்கப்பட்ட உறுப்பை வைத்துக்கொள்ளும் நிலை யில் (Posture) நோயாளிக்கு கவனம் தேவை உதாரணமாக கைகளில் தீக் காயம் ஏற்படும் நிலையில் ஒரு டம் ளரை பிடித்திருக்கும் நிலையில் கை களை வைத்துக்கொள்வது அவசியம். இவ்வாறு வைத்துக் கொள்வதன் மூலம் தோல் சுருக்கம் ஏற்படுவதைத் தடுத்து விரல்கள்மடங்கி பயன்படுத்த முடியாத ஆபத்தைத் தவிர்த்துக் கொள்ள முடியும். உறுப்பை சரியான நிலையில் வைத்துக் கொள்ள வேண் டும் என்பதற்காகவே மாவுக்கட்டுப்

(9ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு - GENERAL KNOWLEDGE

- தற்போதைய உலக சனத் தொகை ஏறத்தாழ 608,97,53,000 பேர் ஆகும். இதில் ஆசியாக்கண்டத்தில் 392,18,44,000 (உலகமக்கள் தொகையில் 64.4%) பேர்.
- பூமியின் மொத்த நிலப்பரப்பு 14,89,50,800 சதுரக் கிலோ மீற்றர்.
- பூமியின் மொத்த நீர்ப்பரப்பளவு 36,11,49,700 சதுரகிலோ மீற்றர்.
- இலங்கையில் அதிக மழையைப் பெறும் இடம் வட்டவளை (500 செ.மீ.)
- இலங்கையில் மிகக்குறைந்த மழையைப் பெறும் இடம் மறிச்சுக்கட்டி(70செ.மீ,)
- விதானை முறைக்குப் பதிலாக ''கிராம சேவகர்'' முறை 1963 மே 1ம் திகதி தொடக்கம் உருவாக்கப்பட்டது.
- இலங்கை சிவில் நிருவாகசபைக்குப் பதிலாக " சிறிலங்கா நிருவாகசேவை " முறை 1973 மே 1ம் திகதியிலிருந்து உருவாக்கப்பட்டது.
- இலங்கையின் "தொழிற் சங்கத் தந்தை என அழைக்கப்பட்டவர் எ. ஈ. குணசிங்க
- இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது அரசியற்கட்சி தேசிய காங்கிரஸ். இது 1919ல் உருவாக்கப்பட்டது. இதன் நிறுவனர் சேர். பொன். அருணாசலம்.
- நீதிச் சேவை ஆணைக்குழுவில் அங்கம் வகிப்போர் பிரதம நீதியரசர், ஜனாதிபதியால் தெரிவு செய்யப்பட்ட இரண்டு உயர் நீதி மன்ற நீதியரசர்கள்.
- இலங்கையின் பாராளுமன்ற தேர்தல் விகிதாசாரப் பிரதி நிதித்துவ முறையில் நடத்தப்படுகின்றது. பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 225. இதில் 196 பேர் மக்களால் விகிதாசார பிரதிநிதித்துவமூலமும் 29 பேர் தேசியப்பட்டியல் மூலமும் தெரிவு செய்யப்படுவர்.
- ஜனாதிபதியால் பின்வரும் சந்தர்ப்பங்களில். பாராளுமன்றத்தை கலைக்க முடியாது பொது தேர்தல் முடிவடைந்து ஒரு வருட காலத்தினுற்ஜனாதிபதிக்குஎதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரும்போது.
- இலங்கையின் முதல் அரசியல் சட்டம் சேர். ஐவர்ஜெனிங்ஸ் என்பவரால் எழுதப்பட்டது,
- இலங்கைப்படத்தை முதலில் வரைந்தவர் தொலமி கி. பி. 2ம் நூற்றாண்டு.
- இலங்கையின் மண் ஆராய்ச்சி விஞ்ஞானி அமரர் டாக்டர் ''பொன்னம்பெருமா''
- அரசியலமைப்பின் அரசின் பிரதான மூன்று துறைகள்
  - i ) சட்டவாக்கத்துறை-பாராளுமன்றம்
  - ii ) நிறைவேற்றுத்துறை - ஜனாதிபதி, அமைச்சர் குழு, பகிரங்கசேவை
  - iii) நீதித்துறை - நீதிமன்றங்கள், நியாய சபை அத்தகைய நிறுவனங்கள்.
- விட்டமின் A - 1913ம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது. இதன் பயன் நல்லகண் பார்வை, தோல்வளர்ச்சி, நோய் எதிர்ப்பு திறன். இதன் குறைவால் கண் நோய் ஏற்படும். இது பச்சைக்காய்கள், மற்றும் கீரை, மீன் எண்ணெய் போன்ற உணவுப் பொருட்களில் காணப்படும்.
- விட்டமின் B - 1936ம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது. இது ஆரோக்கியமான நரம்பு அமைப்பு, மூளை வளர்ச்சி பசி உணர்வு.

### வரலாற்றில் புகழ் பெற்ற சில பிரமுகர்கள்

- நாதுராம் கோட்ஷே:- காந்தியை சுட்டுக் கொலை செய்தவன்.
- ஓஸ்வால்ட்:- ஜோன் என கென்னடியைச் சுட்டுக் கொலை செய்தவன்.
- முகமத்தலி ஜின்னா:- பாகிஸ்தானின் ஸ்தாபகரும் சிறந்த சட்ட மேதை வல்லுனரும்,
- கிறிஸ்டியன் பேனாட்:- முதல் இருதய மாற்று சத்திர சிகிச்சையைச் செய்த தென்னாபிரிக்க வைத்தியர்.
- மாசே துங்:- சீனாவில் பொதுவுடமை அரசாங்கத்தை ஸ்தாபித்த பெருந்தலைவன்.

தொகுப்பு:- வ. வே. ம. மாறன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தனை சம்பள அதிகரிப்புகள் வந்தாலும் அவை ஊழியர்களுக்கு கிடைக்க வேண்டுமானால் அது அவர்களின் செயற்பாட்டிலேயே தங்கி உள்ளது.

போர்க்காலச் சூழ்நிலையில் கூட்டுறவு அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு கூட்டுறவாளர் தினம், மற்றும் மரணித்த சான்றோர்களின் தினங்களை நினைவு கூர்ந்து கூட்டுறவு கலாச்சார பெருமன்றம்'' அமைத்து செயற்பட்டுவரும் கட்டைவேலி - நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திரு க. சிதம்பரபிள்ளை அவர்களுடனான நேர்காணல் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

கேள்வி

சங்கத்தின் ஆரம்பகால நிலைக்கும் இன்றைய கால வளர்ச்சிக்குமிடையே ஏற்பட்ட மாற்றங்களைச் சுருக்கமாக கூறுவீர்களா?

பதில்

ஆரம்ப காலத்தில் கிளைச் சங்கங்கள் குறைவு, பணியாளர்கள் குறைவாக இருந்தனர் ஓர் சிறிய எல்லைக்குள்ளேயே தனது சேவையினை மேற்கொண்டு வந்தது. காலப்போக்கில் குறிப்பாகபுணரமைப்புக்குப்பின் விஸ்தரிக்கப்பட்டு இன்று பல நுகர்ச்சிக் கிளைகள், தேநீர்ச் சாலைகள், எரிபொருள் நிரப்பு நிலையம், கனரக விற்பனை நிலையம் விவசாயசேவை நிலையம் கால்நடை சேவை நிலையம் புத்தக நிலையம், புடவை நிலையம், பாண் சாலை, பொதி செய்யும் நிலையம், நூலகம், வாடகைசேவை, ஓட்டோ சேவை என முயற்சிகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக வேலை வாய்ப்புக்களும் அதிகரித்துள்ளது

கேள்வி

சங்கம் பொருட்களை வியாபாரம் செய்வதோடு மட்டுமன்றி வேறு உற்பத்தி, அபிவிருத்தி முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளதா?

பதில்

உற்பத்தி முயற்சி என்றவகையில் பாண் சாலை, பொதி செய்யும் நிலையம், கன்ரீன்கள், போன்றவற்றை குறிப்பிடலாம்.

குறிப்பாக பொதிசெய்யும் நிலையத்தினை எடுத்துக் கொண்டால் நுகர்வோராக நாளாந்தம் பயன்படுத்தப்படும் பொருட்கள்வேறுபட்ட அளவுகளில் பொதி செய்யப்பட்டு இலகுவாகக் கிடைக்கக் கூடிய வகையில் வழங்கப்படுவதனால் மக்கள் இப்பொருட்களை எங்கள் சங்கத்தில் கொள்வனவு செய்வதற்கு விரும்புகிறார்கள்.

சிறந்த தரத்தில்சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டு குறைந்த விலையில் வழங்கப்படுவதனால் தான் இப

மாணவர்களுக்குத் தேவையான உபகரணங்களையும் விற்பனை செய்து வருகின்றது. இதன் மூலம் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களின் தேவைகள் இலகுவான முறையில் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற நோக்கில் தான் நாங்கள் இக்கன்ரீன்களைப் பாடசாலைகளில் அமைத்தோம் அந்நோக்கமும் அடையப்பட்டு வருவதாக நாம் கருதுகின்றோம்.

கேள்வி

அபிவிருத்தி முயற்சி என்ற வகையில் சமூகத்தில் உங்கள் நடவடிக்கைகள் என்ன?

கிழமைக்கு கிழமை கிளை முகாமையாளருடன் சந்திப்பு ஏற்படுத்தப்பட்டு அவர்களது பிரச்சனைகள் ஆராயப்பட்டு கருத்துக்கள் பரிமாறப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றது. அத்துடன் சங்கப்பணியாளர்களின் சமய இலக்கிய, பொது விஞ்ஞான, மருத்துவ அறிவை மேம்படுத்தும் செய்திகள் அங்கு வாசிக்கப்படுகின்றது.

பொருட்களை மக்கள் கூடுதலாக கொள்வனவு செய்கின்றனர் என நாம் கருதுகின்றோம்.

பாண், பனிஸ், கறிபனிஸ், கேக் இஞ்சி பிஸ்கற், கல்பனிஸ், மடத்தல் றஸ், போன்றவை. இப்பொருட்கள் சிறந்த தரத்திலும், குறைந்த செலவில் மக்களின் திருப்தியை நோக்கமாகக் கொண்டு உற்பத்தி செய்து வழங்குகின்றோம்.

## நேர்காணல்:-

செல்விகள்

பவானி கந்தசாமி

செல்வமதி இராமச்சந்திரன்

( வெளிவாரிப் பட்டதாரிகள் )

எங்கள் சங்கம் 5 கன்ரீன்களை அமைத்து செயற்படுத்தி வருகின்றது, குறிப்பாக 4கன்ரீன்களை பாடசாலைகளில் அமைந்துள்ளது. இங்கு சிற்றுண்டிகள் மட்டுமன்றி பாடசாலை

பதில்

மாணவர்களுக்கு புலமைப்பரிசில் நூலகம், கடன் வழங்கல், வருடந்தோறும் நடைபெறும் விழாக்களை நடாத்துதல் சர்வதேச தினங்களை நடாத்துதல். (கூட்டுறவு தின விழா, பாரதி விழா, மகளிர் தின விழா, நாவலர் நினைவு தினம், போன்றவை) மக்கள் சில வசதிகளை இலகுவாக பெற உதவும். குறிப்பாக சுதரை, நீர்த்தாங்கி, லாண்ட்மாஸ்ரர், தகரப் பந்தல், போட்டோ பிரதி, தட்டச்சு தொலைத் தொடர்பு, ஓட்டோ சேவை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இதில் பல விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படுகின்றது, நாங்கள் வெவ்வேறு அடிப்படைகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்குகின்றோம் மாணவர்கள் பின்வரும் அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்றனர்,

❖ 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்.

(7ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தனை சம்பள அதிகரிப்பு

(6ம் பக்கத் தொடர்ச்சி)

- க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் அதிகூடிய பெறுபேறுகளைப்பெற்ற மாணவர்கள்.
- க. பொ. த. (உ/த) பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதியைப் பெறக்கூடிய உயர் புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள். இவர்கள் எங்கள் சங்கப் பரப்பெல்லைக்குள் அமைந்துள்ள பாடசாலைகளில் கல்வி கற்பவர்களாக அல்லது சங்கப் பரப்பெல்லைக்குள் வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும். இவர்களுக்குப் பணப்பரிசும் புத்தகப் பரிசும் வழங்கப்படுகிறது.
- சங்கத்தில் பணிபுரியும் பணியாளர்களின் பிள்ளைகளுக்கும் புலமைப் பரிசில் நிதி வழங்குகின்றோம், புத்தகங்கள் என்று கூறும் போது திருக்குறள் இலக்கிய, விஞ்ஞான கதைபபுத்தகங்கள் கூட்டுறவு சம்பந்தமான புத்தகங்கள் போன்றவையும் இதனுள் அடங்கும்.

இதனால் அவர்களுடைய அறிவு பல வழிகளிலும், அதாவது பாடம் சம்பந்தப்பட்ட விடயங்களில் மட்டுமின்றி ஏனைய பலதரப்பட்ட விடயங்களிலும் அறிவை விருத்தி செய்து ஓர் பூரண மனிதனாக வாழவேண்டும் என்றநோக்கல் நாங்கள் இதை வழங்குகின்றோம்.

கேள்வி

புலமைப் பரிசில் என்ற அடிப்படையில் வேறு திட்டங்களும் உண்டா?

பதில்

ஆம் மேலே கூறப்பட்டதை விட வறிய மாணவர்களுக்கு அதாவது தமது கல்வியைத்தொடர முடியாமல் இடர்ப்படும் மாணவர்களுக்கும் மாதாமாதம் புலமைப் பரிசில் வழங்கி வருகின்றோம். இதில் பல்கலைக்கழகத்தில் கல்விகற்று வரும் மாணவர்களும் அடங்குவர்.

பாடசாலை மாணவர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் குறைந்தது க. பொ. த. (உ/த) வரையிலாவது தொடர்ந்து கற்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்பது உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இடையில் கல்வியை முடித்துக்கொள்பவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்குவதனால் அவர்களுக்கும், எங்களுக்கும், சமூகத்துக்கும் நன்மை ஏற்படமுடியாது. பொருளாதார நிலையில் கஸ்ரப்படும் மாணவர்களையும் தெரிவு செய்கின்றோம். இவர்கள் சங்கப்பரப்பெல்லைக்குள் வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும். இப் புலமைப் பரிசில்களை வழங்குவதற்கான நிதியை சமூக நலன்விரும்பிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட நிதியுடன் சங்க ஊழியர்கள் மாதாமாதம் தங்கள் சம்பளத்தின் 1% ஐ புலமைப் பரிசில் நிதிக்கு வழங்குகின்றார்கள். அத்துடன் கூடுதலான சோர்வு ஏற்பட்டால் அறவிடப்படும் தண்டப் பணத்தையும் இதற்குப் பயன்படுத்துகின்றோம். இவ்வாறு 2000 / 2001ல் சேகரிக்கப்பட்ட நிதி 3,00,000/- இதில் 1,50,000/- வங்கியில் வைப்பில் இடப்பட்டுள்ளது, இதிலிருந்து வரும் வட்டியும் புலமைப் பரிசில் நிதியாக சேர்க்கப்படுகின்றது.

மாதாமாதம் எவ்வளவு தொகையை இதற்கு செலவிடுகின்றீர்கள் ?

அண்ணளவாக 7000/- புலமைப் பரிசிலாக வழங்கப்படுகின்றது. பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கு 500/- உயர்தர மாணவர் ஒருவருக்கு 150/- ஏனைய மாணவர் ஒருவருக்கு 100/-

> இன்றைய நிலையில் வடமராட்சிக்கு வெளியே காணப்படும் சங்கங்களில் 90% நிவாரண விநியோகமாகக் காணப்படுகின்றது. ஆனால் எங்கள் சங்கத்தில் சமுர்த்தியும் நிவாரணமும் சேர்ந்து 5% மிகுதி 95%ம் காசு விற்பனை. எனவே நிவாரணம் நிறுத்தப்பட்டாலும் எங்கள் சங்க நடவடிக்கை பாதிக்கப்படமாட்டாது உறுதியான நிலையில் தொடர்ந்தும் செயற்பட்டு வரும்.

கேள்வி ;-

நீங்கள் மேற்கொள்ளும் வாடகைசேவை பற்றி சிறிது விளக்கிக் கூறுவீர்களா ?

பதில் :-

தகரப்பந்தல், கதிரை, நீர்த்தாங்கி, பிளேற், கோப்பைகள், உபசரிப்புப் பாத்திரங்கள், குத்துவிளக்குபோன்றவை எங்கள் சங்கத்தால் வாடகைக்கு விடப்படுகின்றது. மக்களுக்கு தேவையான நேரத்தில் தேவையான இடத்தில் இவற்றை வழங்குகின்றோம். மேலும் தனியாரிலும் பார்க்கக்குறைந்தவாடகைக்கு இவற்றை வழங்குவதனால் மக்களின் செலவு குறைக்கப்படுகின்றது. உதாரணமாக கதிரை வாடகையை ஆரம்ப காலம் தொடக்கம் 4/- ஆகவே அறவிட்டு வருகின்றோம். அத்துடன் 1000/- விற்கு மேற்பட்ட பங்குப்பணத்தினை கொண்டிருப்பவர்களுக்கு இச்சேவைகளை இலவசமாக வழங்கவும் 79 வது கூட்டுறவு தினவிழாவில் தீர்மானித்துள்ளோம்.

கேள்வி :-

தட்டச்சு, போட்டோபிரதி செய்தல் போன்ற சேவைகளை எந்த வகையில் மேற்கொண்டு வருகிறீர்கள் ?

பதில் :-

தமிழ் தட்டச்சு இயந்திரங்கள் இரண்டும், ஆங்கில தட்டச்சு இயந்திரம் ஒன்றும் எங்கள் சங்கத்தில் உள்ளது. சங்கத்தில் தமிழ் தட்டெழுத்தாளர்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்ற போதும் அத்தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் மக்களின் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் எங்கள் சங்கம் செயற்பட்டு வருகின்றது, அத்துடன் போட்டோ பிரதி, றோணியோ செய்தலிலும் மக்களுக்கு திருப்தியை ஏற்படுத்தக் கூடிய வகையில் செயற்படுகின்றோம்.

கேள்வி :-

உங்கள் நூலக பயன்பாடுகள் பற்றி கூறுவீர்களா ?

பதில்

கிடைத்தற்கரிய பலபழைய நூல்களை எமது நூலகத்தில் கொள்வனவு செய்து வைத்துள்ளோம். இதனால் இந் நூல்களை தேவையானவர்கள் இலகுவான முறையில் தங்கள் தேவையை நிறைவு செய்து கொள்கின்றார்கள்.

மாணவர்களுக்கு தேவையான குறிப்புக்களை பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது.

பலதரப்பட்ட மக்களுக்கும் ஏற்ற வகையில் தமிழ், ஆங்கிலபுத்தகங்கள்

(8ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தனை சம்பள அதிகரிப்பு

7ம் பக்கத் தொடர்ச்சி

சஞ்சிகைகள், பத்திரிகைக் குறிப்புக்கள் ( Paper Cuting ) போன்றவை சேகரித்து வைக்கப்பட்டுள்ளது.

இப்புத்தகங்கள் கிழமைக்கு ஒரு தடவை மாற்றப்படல் வேண்டும். அவசியதேவை ஏற்படின் சங்க கல்வி உத்தியோகத்தரின் அனுமதியுடன் கூடிய காலத்திற்கு வைத்திருந்து பயன்படுத்தலாம்.

கேள்வி

நீங்கள் அங்கத்தவர்களுக்கு கடன் வசதிகளை வழங்குகின்றீர்களா ?

பதில்

கூட்டுறவுக் கிராமிய வங்கியின் கீழ் பலவகையான கடன்களை வழங்குகின்றோம். முக்கியமாக வட்டி இல்லாக கடனாக வைப்புக்கு எதிரான நுகர்ச்சிக்கடன் அடிப்படையில் சைக்கிளும், நுகர்வுப் பொருட்களும் வழங்கப்படும்.

ஒருவருடத்திற்கு உட்பட்ட கடன் 16% வட்டி, நிலையான வைப்புக்கெதிராக கடன் 18% வட்டி. பெரிய ளவிலான நீண்ட காலக் கடனுக்கு உறுதிப் பிணை பெறப்படுவதுடன் 20% வட்டியையும் அறவிடுகின்றோம்

கேள்வி

இக்கடனைப் பெற்றுக்கொள்வதற்கான வரையறைகள் என்ன ?

பதில்

எமது சங்கக்கிளை ஒன்றில் அங்கத்தவராக இருப்பதுடன் பங்குப பணம் குறைந்தது 200/ ஆக இருத்தல் வேண்டும். அத்துடன் சங்கக் கிராமிய வங்கியில் சேமிப்புக் கணக்கினைக் கொண்டிருப்பதோடு 2 பிணையாளிகளினால் பிணை வைக்கப்படல் வேண்டும், அரசசார்பற்ற நிறுவனங்கள் கடன் வசதிகளை எமக்கு அளித்து வருகிறது. உதாரணமாக யோறாட் நிறுவனம் இடைக்கிடையே கடன்களை வழங்கிவருகின்றது. இவை அங்கத்தவர்களுக்கு கடனாக வழங்கப்படுகின்றது. தற்பொழுது 10 இலட்சம் ரூபா கடன் யோறாட்டினால் வழங்கப்பட்டுள்ளது இக்கடன் குறைந்த 14% வீத வட்டிக்கு அங்கத்தவர்களுக்கு வழங்கப்படுகிறது.

கேள்வி

உங்கள் சங்கம் சமூக மேம்பாடு தொடர்பாக ஏதாவது அமைப்புக்களை உருவாக்கி செயற்பட்டு வருகின்றதா ?

பதில்

ஆம், கூட்டுறவுக் கலாச்சாரப் பெருமன்றமும், கூட்டுறவு மகளிர் குழுவும் எங்கள் சங்கத்தின் கீழ் செயற்பட்டு வருகின்றது கூட்டுறவுக் கலாச்சாரப் பெருமன்றம் 1985 ம் ஆண்டளவில் காலஞ்சென்ற நெல்லை க. பேரனை அமைப்பாளராகக் கொண்டு இப்பெருமன்றம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஆரம்ப கர்த்தாக்களாக திரு. கருணையோகன் Dr. M. K. முருகானந்தன் திரு தெணியன், குப்பிளான் ஐ. சண்முகம், செ. சதானந்தன், திரு கலாமணி திரு சி. வன்னியகுலம் திரு மன்னவன் கந்தப்பு, திரு. இ, ஸ்ரீகாந்தன் போன்றோர் இருந்தனர்.

இவ்வமைப்பு நூல்வெளியீடுகளை மேற்கொள்ளல் குறிப்பாக உயிர்ப்பு முதலுதவி என்ற சிறுகதைத் தொகுதி சிவத்திரன் சித்திரக்கொத்து போன்ற நூல்கள ஆரம்ப காலத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது, மேலும் நல்லை நாவலன் கோவை வெளியீடு பண்டிதமணி நூற்றாண்டு விழா ஆறுமுகநாவலா அரங்கு போன்றவற்றில தானே மேலே சொன்ன புலமைப பரிசில் நிதியினை வழங்கி வருகின்றோம். புத்தகங்களை அறிமுகம் செய்தல் இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில அவர்களது புத்தகங்களை கொள்வனவு செய்வதுடன் சமூகத்திற்கு அறிமுகம் செய்து வைத்தல் உதாரணமாக திரு. ந. பார்த்தீபனால் எழுதப்பட்ட மனத்தூறல், செல்வி ஆரபியின் கரைதேடும் அலைகள போன்றவற்றைக் குறிப்பிடலாம். இத்துடன திருமதி கோகிலா மகேந்திரன், திரு வன்னியகுலம் போன்றோரின நூல்களும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

திரைப்பட விமர்சனம், பெரியாரை நினைவு கூரல், இலக்கிய கலந்துரையாடல் மற்றும் சங்கத்தால நடாத்தப்படும் விழாக்கள் இப்பெருமன்றத்தின் கீழ் நெறிப்படுத்தப்பட்டு நடாத்தப்படுகின்றது.

நாட்டு நிலைமை போர்க்கால சூழ்நிலை காரணமாக இம்மன்றம் பல இடர்பாடுகள் மத்தியிலும் சிறப்பாக செயற்பட்டு வந்தது. 1990 - 1995 காலப்பகுதியில் இடப்பெயர்வு காரணமாக செயலிழந்து காணப்பட்டது; ஆயினும் 1995ன் பின் மறுசீரமைக்கப்பட்டு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. செல்வராஜா தலைமையில் மீண்டும் புதுப் பொலிவுடன் செயற்பட்டு வருகின்றது.

கேள்வி :-

உங்கள் சங்கம் சிறந்த முறையில் செயற்பட்டு வருகின்றமைக்கு ஊழியர்கள் காரணம் என்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது. நீங்கள் ஊழியருடன் சிறந்த முறையில் தொடர்புகளை ஏற்படுத்தி செயற்படுவதற்கு என்ன வழிவகைகளை கையாளுகின்றீர்கள் ?

பதில் :-

கிழமைக்கு கிழமை இளைமுகாமையாளருடன் சந்திப்பு ஏற்படுத்தப்பட்டு அவர்களது பிரச்சனைகள் ஆராயப்பட்டு கருத்துக்கள் பரிமாறப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றது. அத்துடன் சங்கப்பணியாளர்களின் சமய இலக்கிய, பொது விஞ்ஞான, மருத்துவ அறிவை மேம்படுத்தும் செய்திகள் வாசிக்கப்படுகிறது.

கேள்வி :-

பெரும்பாலான சங்கங்கள் நிவாரணம் இருந்தால் தான் தங்கள் செயற்பாடுகளை தொடர்ந்து மேற்கொள்ள முடியும் என்ற நிலையில் காணப்படுகின்றது உங்கள் சங்கத்தின் நிலைப்பாடென்ன ?

பதில் :-

இன்றைய நிலையில் வடமராட்சிக்கு வெளியே காணப்படும் சங்கங்களில் 90% நிவாரண விநியோகமாகக் காணப்படுகின்றது. ஆனால் எங்கள் சங்கத்தில் சமுர்த்தியும் நிவாரணமும் சேர்த்து 15% மிகுதி 95% ம் காசு விற்பனை எனவே நிவாரணம் நிறுத்தப்பட்டாலும் எங்கள் சங்க நடவடிக்கை பாதிக்கப்படமாட்டாது உறுதியான நிலையில் தொடர்ந்து செயற்பட்டு வரும்.

உங்கள் சங்கம் எந்த தரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது ?

2ம் தரத்தில் உள்ளதுஇவ்வாறு சிறப்பாக செயற்படும் சங்கம் ஏன்1ம் தரத்தினை எட்ட முடியவில்லை ?

120 இலட்சத்திற்கு மேற்பட்ட விற்பனையைக் கொண்டுள்ள சங்கம் 1ம் தரத்தில் உள்ளடக்கப்படுகிறது. எங்கள் சங்கத்தின் விற்பனை 90 இலட்சத்திற்கும் 100 இலட்சத்திற்கும் இடையில் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் எங்கள் சங்க

9ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீக்காயம் பட்டவுடன்

(4ம் பக்கத்தொடர்ச்சி),

போடப்படுகிறது. கழுத்தில் தீக்காயம் ஏற்படும் நிலையில் தோல் சுருக்கத்தை தடுக்க தலையை நிமிர்த்தியே வைத்துக்கொள்ளவேண்டியிருக்கும் இவ்வாறு செய்தால் தான் பாதிக்கப்பட்ட உறுப்பை மீண்டும் பழையபடி பயன்படுத்த முடியும்' தீக்காயங்களுக்கு பல சமயங்களில் மருத்துவ சிகிச்சையோடு பிஸியோ தெரபி சிகிச்சையும் தேவைப்படும்.

சிறிய தீக்காயங்கள் ஆறியவுடன் தோலின் நிறம் வழுவழுப்பாக வெண்மையாக இருக்கும் அந்த இடத்தில் தினமும் சிறிது தேங்காய் எண்ணெய் தடவி வந்தால் இயல்பான நிறத்துக்கு தோல்மாறிவிடும்.

## நெஞ்சுவலி போக்கும் மூலிகைகள்

1 கைப்பிடி துளசி இலைகளை எடுத்து அத்துடன் நான்கு செம்பருத்திப் பூக்களைச் சேர்த்து ஒரு மண்சட்டியில் இட்டு அரை லீட்டர் தண்ணீர் ஊற்றி தண்ணீர் பாதியாகும் வரை காய்ச்சி இறக்கி வடிகட்டி வைத்துக் கொண்டு ஒருநாள் ஆறுவேளை வீதம் பத்துநாட்கள் சாப்பிட்டு வர இதயவலி குணமாகும்

2 கல்யாண பூசணிக்காயை எடுத்து பிழிந்து சாறுஎடுத்து இச்சாற்றில் சிறிதளவு தேன் அல்லது கற்கண்டு சேர்த்து சாப்பிட்டால் இதயபலவீனம் மூளை சோர்வு தீரும்

3 வெண்தாமரை பூ இதழ்களை ஒருமண்சட்டியில் போட்டு ஒரு லீட்டர் நீர் ஊற்றி பாதியாக சுண்டும்வரை காய்ச்சி இறக்கி ஆறியபின் வடிகட்டி இதனுடன் வல்லாரை இலைச்சாறு சேர்த்து பத்து நாட்கள் காலை, மாலை ஒரு அவுன்ஸ் வீதம் அருந்தி வந்தால் இதய படபடப்பு தீரும்

4 குப்பைமேனி இலையை உலர வைத்து பாலில் கலந்து ஏழு நாட்கள் சாப்பிட நெஞ்சுவலி தீரும்

5 வெந்தயக் கீரை கைப்பிடி அளவு எடுத்து ஒரு லீட்டரில் போட்டு நன்கு காய்ச்சி வடிகட்டி 10 நாளைக்குசாப்பிடவும் வேளைக்கு ஒருஅவுன்ஸ் நீரில் சிறிதளவு தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் நெஞ்சுவலி தீரும்

6 திராட்சை பழத்தை பன்னீரில் ஊறவைத்து சாப்பிட்டு வர இதய படபடப்பு பலவீனம் குணமாகும்

7 ஒரு டம்ளர் பசும்பாலில் முட்டையில் வெண்கரு, தேன் இவற்றை கலந்து சாப்பிட்டு வந்தால் இதய வலி நிற்கும்

8 துளசி இலைகளை எடுத்து சாறு பிழிந்து இதனோடு தேன் கலந்து சாப்பிட்டு வர இதய பலவீனம் மறையும்.

9 கைப்பிடி அளவு ரோஜா இதழ்களை எடுத்து இடித்து சாறு எடுத்து இதனோடு பன்னீர்கலந்து அருந்தி வந்தால் நெஞ்சுவலி தீரும்

10 5 கிராம் ரோஜா மொட்டை எடுத்து வெயிலில் உலர்த்தி இடித்து தூளாக்கி கொள்ளவும். இதோடு ஜாதிக்காய்த்தூளை 5 கிராம் கலந்து ஒருகரண்டி எலுமிச்சைசாறு கலந்து ஒரு டம்ளரில் போட்டு கலக்கி குடித்து வர நெஞ்சுவலி தீரும்.


# நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

மக்கள் சேவையில் ;

- நுகர்ச்சிச் சேவை
- நுகர்ச்சிக் கடன் விற்பனை
- பிடவைகள் விற்பனை நிலையம்
- விவசாய சேவை
- கிராமிய வங்கி சேவை
- மின்கட்டணம் வசூலித்தல்
- வெதுப்பக சேவை
- கால்நடை வளர்ப்பு
- எரிபொருள் நிலையம்
- ஓட்டோ சேவை

### வாடகைச் சேவைகள்

- தகரக் கொட்டகை
- கதிரைகள், பிளேற், சில்வர் பாத்திரங்கள் முதலியன.

### தொலைபேசிச் சேவை

- குறைந்த கட்டணத்தில் நேரடி இன்ரநெற் அழைப்புக்கள்.

தொலைபேசி இலக்கங்கள் ;- 2143 2969

★ உங்கள் தேவைககே எங்கள் சேவை ★




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எத்தனை சம்பள...

(8ம் பக்கத்தொடர்ச்சி)

எல்லைப்பரப்பினுள் உள்ள பாவனையாளர்கள் குறைவு. இதனால் விற்பனையைக் கூட்டுவது என்பது கடினம் இதனால் தான் 2ம்தர சங்கத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது

**கேள்வி**

அதிகரித்த சம்பளத் திட்டத்தினை வழங்கினால் உங்களுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுமா ?

**பதில்**

இல்லை, சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டுமாயின் வியாபாரம் அதிகரிக்கப்பட வேண்டும் அது ஊழியர்களின் கையிலேயே தங்கியுள்ளது. மேலும் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதனால் நட்டம் ஏற்பட்டால் அதனை நட்டமாக கருத முடியாது எனினும் நாம் இன்றும் அதிகரித்த சம்பளத்திட்டத்தினை நடைமுறைப் படுத்தவில்லை.

**கேள்வி**

ஊழியர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் ஊக்குவிப்புத் திட்டங்கள் ஏதாவது நடைமுறைப்படுத்துகின்றீர்களா ?

**பதில்**

ஆம் விற்பனைச்சுழற்சி கூடுதலாக இருந்தால் உதாரணமாக பொதி செய்யும் நிலையம், பாண்சாலைப் பொருட்கள், பயோரெக் சோடா, பழுதடையக்கூடிய பொருட்கள் கூடுதலாக விற்பனை செய்யப்பட்டால் ஊக்குவிப்பு வழங்குகிறோம்.

இருந்த விற்பனை நிலையிலும் பார்க்க கூடுதலான விற்பனை மேற்கொள்ளப்பட்டால் அச்சந்தர்ப்பத்திலும் ஊக்குவிப்பு வழங்கப்படும்

பணியாளர்கள் பல சேவைகள் ஒரே நேரத்தில் மேற்கொண்டால் அவர்களுக்கு வழங்குதல்.

**கேள்வி**

போக்குவரத்துச் சேவை, வைத்திய சேவை போன்றவற்றை செய்யும் உத்தேசம் இல்லையா ?

**பதில்**

தேவை இருக்கும் இடத்தில் தான் சேவையை மேற்கொள்ள வேண்டும் எங்கள் சமூகத்தில் இதற்கான தேவை முழுமையாக தனியாரால் பூர்த்தி செய்யப்படுவதனால் நாங்கள் இதனை மேற்கொள்ள வேண்டிய தேவை இல்லை.

**கேள்வி**

புதிய அபிவிருத்திக்கான திட்டங்கள் ஏதும் நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளீர்களா ?

**பதில்**

திட்டங்கள் பலஉண்டு. வரும் காலத்தில் செயற்படுத்தப்படும்.

- மாதாந்த தகவல்வெளியீட்டினை மேற்கொள்ளல்.
- ரியூசன் சென்ரர் நடாத்துதல்
- மருந்துக்கடை

மக்கள் எல்லாத்தேவைகளையும் ஒரே நேரத்தில் எமது கூட்டுறவுச் சங்கத்தில் நிறைவேற்றக் கூடிய வகையில் சங்கத்தின் செயற்பாட்டை உயர்த்துதலே எமது நோக்கமாகும்.


### கூட்டுறவை மேம்படுத்தும்
# கட்டைவேலி - நெல்லியடி பல நோ. கூ. சங்கத்தின் சேவைகள் :

நுகர்ச்சி சேவைக்கு மேலாக,

விவசாய சேவை · கால்நடை சேவை · எரிபொருள் விற்பனை · கட்டிட உபகரணங்கள் · விறகு காலை · புத்தகங்கள் விற்பனை நிலையம் · புடவை விற்பனை நிலையம் · பொதி செய்யும் நிலையம் · வெதுப்பகம் · பாடசாலைத் தேனீர்ச் சாலைகள் · வாடகைச் சேவைகள் · வாகனச் சேவைகள் · கிராமிய வங்கி · தொலைபேசி பக்ஸ் சேவைகள் · தட்டச்சு · போட்டோப் பிரதி · றோணியோ · கலாச்சாரக் கூட்டுறவுப் பெருமன்றம் · நூல் நிலையம் · நூல் வெளியீடு · நூல் அறிமுகம் · சர்வதேச தினக் கொண்டாட்டங்கள் · மகளிருக்கான பயிற்சிகள்.

தொலைப்பசி :- 021 - 3263 பக்ஸ் :- 070 - 21 540

இவை அனைத்தும் உங்களுக்காகவே !




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவுசார்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மன்றி ஊழியருக்கும் பகிரப்படவேண்டும். நிறுவனத்தின் இலாப உழைப்புக்கு பெரிதும் பாடுபட்டவர்கள் ஊழியர்களே என்பதனால் அவர்களது அர்ப்பணிப்பை மேலும் உயர்த்த இலாபத்தில் பங்கு பெறுதல் வேண்டும்.

**பயிற்சியும் அபிவிருத்தியும்**

ஊழியர்கள் தமது வேலையை திறனுள்ளதாக மாற்றுவதற்கு பயிற்சி மிக அவசியமாகும். இப்பயிற்சியே அவர்களது வேலையை திறமையாக மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதுடன் ஊழியர்களிடையே அர்ப்பணிப்பு மனப்பான்மையையும் வளர்க்கும்.

**ஆள்நோக்கிய தலைமைத்துவம்**
**Concern For People**

ஊழியர்களது கௌரவத்தை பேணக்கூடிய நிர்வாக அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் நிறுவனத்தில் இலாப உழைப்பையே கருத்தில் கொள்ளாது ஊழியர் நலனில் அக்கறை காட்டும் நிர்வாக முறைமை அர்ப்பணிப்பை வளர்க்க உதவும்.

**தொடர்பாடல்**
**Communication**

ஊழியர்களுடன் தொடர்ச்சியாக செய்திப் பரிமாற்றத்தை ஏற்படுத்தும் சாத்தியமானது அர்ப்பணிப்பினை அதிகரிக்கின்றது. திறனுள்ள தொடர்பாடலைக் கொண்ட நிறுவனங்கள் எல்லாம் ஊழியர் அர்ப்பணிப்பினை உச்ச அளவில் கொண்டிருப்பதனைக் காணமுடியும்.

**தொழில்நுட்பம்**
**Technology**

ஊழியர்களது வேலைகளை இலகுவாக்கக்கூடிய தொழில்நுட்பம் புகுத்தப்படுமானால் அது ஊழியர்களது அர்ப்பணிப்பினை உயர்த்தும். இதன்படி புதுமைகளைப் புகுத்துதல் எப்பொழுதுமே ஊழியர்களுக்கான வேலையை இலகுவாக்கி அவர்களிடையே வேலைக்கான அர்ப்பணிப்பினை உயர்த்தும்.

**கட்டுப்பாடு Control**

ஊழியர்கள் எப்படித் தமது வேலைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே இங்கு கட்டுப்பாடாகும், ஒவ்வொரு ஊழியரும் தான் செய்ய வேண்டிய வேலையின் அளவை அறிந்து கொண்டார்களாயின் அதுவே அவர்களுக்கு வேலையிலான அர்ப்பணிப்பைக் கொண்டு வரும்.

மேலே கூறப்பட்ட காரணிகள் எல்லாம் ஊழியர்களுக்கு வேலையிலான அர்ப்பணிப்பினை விருத்தி செய்கின்ற காரணிகளாகக் கொள்ளப்படும். ஜப்பானிய முகாமைத்துவம் வேலை நிறைவேற்றத்தில் அதிகம் வெற்றி பெறக் காரணம் அவர்களிடையே தோற்றுவிக்கப்படும் விசுவாசமும் அர்ப்பணிப்புமேயாகும்.

12ம் பக்கம் பார்க்க

---

**பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ-து பருத்தித்துறை**

# தலைமைக் காரியாலயக் கட்டிடத்திற்கான
# அடிக்கல் நாட்டு விழா

கடந்த 12 - 09 - 2001 ம் திகதி புதன்கிழமை காலை 9-00 மணி தொடக்கம் 10-00 மணிவரையுள்ள சுபவேளையில் ; பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கக் காணியில் இருமாடிக் கட்டிட பணிமனை கட்டுவதற்கு திருவருள் பாலித்து இவ்வடிக்கல்லை

பருத்தித்துறை பிரதேச சபைத்தலைவர்

உயர்திரு. ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் அவர்கள் நாட்டினார்.

இவ்வைபவத்திற்கு பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ஆ. சிவசுவாமி அவர்களும், உதவித் திட்டப் பணிப்பாளர் திரு. என். மகேந்திரன் அவர்களும் சட்டத்தரணி திரு. சபா ரவிந்திரன் அவர்களும் இயக்குனர்களும் பணியாளர்களும் கலந்து கொண்டனர். இக்கட்டிடத்திற்கான நிதியை மாண்புமிகு அமைச்சர் திரு கே. என். டக்ளஸ் தேவானந்தா அவர்கள் வடக்கின் மீள்குடியேற்றபன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட நிதியிலிருந்து ஒதுக்கித் தந்துள்ளார் என்பதனையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொதுமுகாமையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News paper at the G. P. O
SriLanka Under / No K. V. J. 59 / 87



UNIVERSITY OF JAFFNA LIBRARY 05 NOV 2001 PERIODICALS DIVISION

# மகளிர்களுக்கான ஐந்துநாள் தலைமைத்துவ பயிற்சிப் பட்டறை

யாழ் மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவு மகளிர் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கங்களின் மகளிர்களுக்கான தலைமைத்துவ 5 நாள் பயிற்சி நெறி ஒன்று இம்மாதம் 15ம் திகதியில் இருந்து 19ம் திகதி வரை நடைபெற்றது.

யாழ் மாவட்ட கூட்டுறவு சபையின் அனுசரணையுடன் யாழ் வீரசிங்க மண்டபக் கட்டிடத்தொகுதியில் மாவட்ட மகளிர் குழு உபதலைவி இ. இராசமணி தலைமையில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. பெ. கனகசபாபதி பயிற்சி நெறியை ஆரம்பித்து வைத்து சிறப்புரையாற்றினார்.

முதல் நாள் பயிற்சி வகுப்பில் தெல்லிப்பழை பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் திரு. வ. சத்தியசீலன் வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட பெண்களை அபிவிருத்தி செய்வதற்கான'' வாய்ப்புக்கள் பற்றியும், யாழ் பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறையைச் சேர்ந்த வைத்திய கலாநிதி சி என்.நச்சினார்க்கினியன் உணவுக் குறைபாடும்; சமுதாய தாக்கமும் பற்றி உரையாற்றினார்கள்.

யாழ். மாவட்ட செயலாளர் திரு. சு. சிவசுப்பிரமணியம் கூட்டுறவு நிறுவனங்களின் கட்டமைப்பு'' பற்றியும், யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. என் ஈஸ்வரன் '' பெண்களுக்கான சுயதொழில் முயற்சிகளை இனம் காணலும், செயற்திட்ட அறிக்கை தயாரித்தல் '' சம்மந்தமாக, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. எம். சின்னத்தம்பி '' ஆசிய நாடுகளின் பெண்கள் தலைமைத்துவமும் எதிர்நோக்கும் பிரச்சினைகளும், தீர்வுகளும்'' சம்மந்தமாகவும் ''வளங்களும், சுயதொழில் முயற்சியும்'' சம்பந்தமாக கைத்தொழில் அபிவிருத்திச் சபையைச் சேர்ந்த திரு. எஸ். சிவகெங்காதரன் அவர்களும் இரண்டாவது நாள் நிகழ்வில் கருத்துரை வழங்கினார்கள்.

மூன்றாம் நான்காம் நாள் நிகழ்வில் யாழ்; மாவட்ட கூட்டுறவு சபையின் மகளிர் விவகார உத்தியோகத்தர் திருமதி வே. செல்வரத்தினம் ''கூட்டுறவு மகளிர் தலைமைத்துவம். தொடர்பாகவும்; ''கூட்டுறவும் மகளிர் குழுவின் நோக்கமும் செயல்பாடுகளும்'' சம்மந்தமாகவும்; சென்பரியோவான் முதலுதவிப் படையணி மாவட்ட ஆணையாளர் திரு.க. அருந்தவராஜா ''முதலுதவியும் சுகாதார சீர்முறைகளைக் கடைப்பிடித்தலும்'' தொடர்பாகவும் கருத்துரை வழங்கினார்கள்

பயிற்சிவகுப்பின் இறுதி நாள் அன்று ''மகளிர் தலைமைத்துவம், மனிதத்தொடர்பு, தேர்ச்சித்திறன் அபிவிருத்தி சிறந்த தீர்மானம் எடுத்தல் சம்பந்தமாக இளைஞர் சேவை மன்ற மாவட்ட இணைப்பாளர் திரு. எஸ், சிவதெட்சணாமூர்த்தி அவர்களும்; '' பெண்களுக்கான சுய முயற்சியும் நிதிமூலமும்'' '' சம்மந்தமாக யாழ் வர்த்தகவங்கி முகாமையாளர் திரு எஸ் ரவீந்திரா அவர்களும், ''பெண்களுக்கு அவசியமான சட்ட அறிமுகம்'' சம்மந்தமாக ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு. மு. திருநாவுக்கரசு அவர்களும் கருத்துரை வழங்கினார்கள்.

## அறிவுசார்..

11ம் பக்கத் தொடர்ச்சி

### முடிவுரை

அறிவுசார் மூலதனமானது தற்கால மனிதவள முகாமைத்துவத்தில் பிரபலம் பெறுவதாகும். ஊழியர்களிடையே தகமையும் அர்ப்பணிப்பும் உயருமாயின் அது அறிவுசார் மூலதனத்தை விருத்தி பெறச் செய்யும். எப்பொழுதுமே அறிவுசார் மூலதனத்தின் அங்கமான அர்ப்பணிப்பை விருத்தி செய்ய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும் குறிப்பாக நிறுவனத்தைவிட்டு வெளியேறுவோர்களிடமிருந்து தகவலைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்

அதேநேரம் குடும்பத்தின் தேவைகளை நிறுவனங்கள் பொறுப்பேற்று பூர்த்தி செய்தல் வேண்டும் அத்துடன் பிரதான தீர்மானங்களில் ஊழியர் பங்கு வேண்டும் இவற்றின் அடிப்படையில் ஊழியர்களின் அர்ப்பணிப்பு உயர்த்தப்பட முடியும். எனவே தான் அர்ப்பணிப்பையும் ஊழியர் தகமையினையும் அதிகரிப்பதனால் உருவாகும் அறிவுசார் மூலதனம் ஒரு நிறுவனத்தில் விருத்தி செய்யப்படுமாயின் அது ஊழியர் நிர்வாகத்தை சிறப்படையச் செய்துவிடும். இது நிறுவனங்களின் இலக்கினை அடைவதற்கான மிகச்சிறந்த வழியாக அமைவதுடன் உற்பத்தித் திறனை மிகச் சுலபமாக உயர்வடையச் செய்துவிடும். என்பதில் எவ்வித ஐயமில்லை.

## புதியநிர்வாகிகள்

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

தலைவர் திரு. க. மெய்யழகன், உபதலைவர் திரு. க. இராசரத்தினம் செயலாளர் திரு சி. இராசமூர்த்தி நெறியாளர்களாக திரு. வ. முத்துராசா மு. தவபாலன், செ. குணேந்திரன் சி இராசேந்திரம், அ அமலோற்பவநாயகம், செல்வி க சற்குணேஸ்வரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## கட்டிடத் திறப்புவிழா

புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புனரமைக்கப்பட்ட கிராமியவங்கியின்மேல் மாடி கட்டிடத்திறப்பு விழாவும்; ''கூட்டுறவுதீபம்'' மலர் 'வெளியீடும் 30 - 09 - 2031 ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு சங்க மகாநாட்டு மண்டபத்தில், சங்கத் தலைவர் டாக்டர் க. இராசரட்ணம் ஜே; பி. தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்திற்கு பிரதம விருந்தினராக யாழ் அரச அதிபர் க சண்முகநாதன், அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக திரு. செ. ஞ. சண்முகநாதன் யாழ் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (அபிவிருத்தி) திரு. எஸ் கனகசபாபதி யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர். (எண்பார்வை ) தீவக கல்விப்பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன், முன்னாள்பாராளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள்ஜனனாயக்க கட்சி அமைப்பாளருமான திரு .ந மதனராஜா, வேலணை பிரதேச சபை தலைவர் திரு ந கருணாகரமூர்த்தி அவர்களும், கௌரவ விருந்தினர்களாக தீவுப்பகுதி வேலணை பிரதேச செயலர் செ இரத்தினம் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திரு ஜே எக்ஸ் செல்வநாயகம் யாழ் கூட்டுறவு விவசாய சமாசத் தலைவர் திரு சீ. வீ கே. சிவஞானம் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை அச்சகத்தில் அச்சிட்டு இல 12, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள வீரசிங்கம் மண்டபத்தின் 2ம் மாடியில் இயங்கும் யாழ். மா கூ: சபையினரால் 2001ம் ஆண்டு புரட்டாதி மாதம் வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org